நீதிமன்றத்திலே இருந்தன. வழக்குகள் நீதிமன்றத்திலே இருக்கும்போது இப்போது பேசலாமா என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்கின்றார். அந்தக் காலகட்டத்தில் புரட்சித் தலைவி மீது பல வழக்குகள் இருந்த நேரத்தில் இந்தச் சட்டமன்றத்திலே பல ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் தவறு செய்திருக்கின்றார்கள்; அவருக்குத் தண்டனை கொடுங்கள்; அவரைச் சிறைக்கு அனுப்புங்கள் என்று அவர்களே ஒரு நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளைப்போல இந்தச் சட்டமன்றத்திலே பேசிய குறிப்புகள் எல்லாம் இங்கே இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். பழைய சட்டமன்றக் குறிப்புகளை எல்லாம் நான் படித்துப் பார்த்தேன். பழைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள்மீது தனிப்பட்ட முறையிலே நான் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறேன். ஆனால், சட்டமன்ற மரபுகளுக்கு மாறாக, ஒருவர் மீது வேண்டுமென்றே குற்றங்களைச் சுமத்தி, 'ஊழல் செய்தார்; 1,000 கோடி ரூபாய் ஊழல்; 2,000 கோடி ரூபாய் ஊழல்;' என்று இந்தச் சட்டமன்றத்திலே தொடர்ந்து பேசப்பட்டிருக்கிறது. சட்டமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் நச்சுக் கொடியைப் போலவே அது பரவியிருக்கிறது. அவற்றையெல்லாம் நீக்க வேண்டுமென்றால்கூட, நீக்குவது மிகச் சிரமம். அந்த அளவிற்குப் பேசப்பட்டிருக்கிறது. அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அவை எல்லாம் நல்ல மரபுகள் அல்ல. அந்த மரபுகளை இனிமேல் நான் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டேன். நிச்சயமாக இனிமேல் நல்ல மரபுகளை நான் கடைபிடிக்கத் தயாராக இருக்கிறேன். பழைய சட்டமன்றத்திலே அந்த மரபுகளைத் தூக்கியெறிந்த நிகழ்ச்சிகளை இப்போதும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பிரச்சினை இத்தோடு முடிகிறது.

2. அறிவிப்பு

கவன ஈர்ப்பு அறிவிப்புகளுக்கு துறையினர் ஏழு நாட்களுக்குள் பதிலளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அனுமதிக்கப்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகள் குறித்த பதில்களைத் தொடர்புடைய செயலகத் துறைகள் பேரவை விதிகளுக்கேற்ப ஏழு நாட்களுக்குள் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.